# தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
## TAMILNADU TEACHERS EDUCATION UNIVERSITY
(Established under Tamil Nadu Act 33 of 2008)
Gangaiamman Koil Street, Karapakkam, Chennai - 600 097.
Website: www.tnteu.ac.in Email: registrar@tnteu.ac.in; Phone – 044 2838 9038

**Lr. No.TNTEU/R/Elig./B.Ed Admission 2018-19/** **Date: 19.07.2018**

முனைவர் நா.ரவீந்திரநாத் தாகூர், Ph.D
பதிவாளர்(பொ)

பெறுநர்
முதல்வர்கள்,
இப்பல்கலைக்கழக இணைவு பெற்ற அனைத்து சுயநிதி கல்வியியல் கல்லூரிகள்.

அய்யா/அம்மையீர்,

**பொருள்:** கல்வி ஆண்டு 2018-2019 – பி.எட் சேர்க்கை – பல்கலைக்கழக இணைவு பெற்ற சுயநிதி கல்வியியல் கல்லூரிகள் - பி.எட் சேர்க்கை தொடர்பான கால அட்டவணை – அசல் சான்றிதழ் சரிபார்த்தல் தொடர்பாக மேலும் சில விவரங்கள் அறிவித்தல் - தொடர்பாக.

பார்வை: இப்பல்கலைக்கழக கடித எண்:TNTEU/R/B.Ed Admission 2018-19/171, நாள் 18.07.2018.

------

பார்வையில் கண்ட இப்பல்கலைக்கழகக் கடிதத்தில், நடப்பு கல்வி ஆண்டில் பி.எட் சேர்க்கைக்கான கடைசி நாள், தகுதிக்கட்டணம் செலுத்துதல், அசல் சான்றிதழ்கள் சரிபார்த்தல் போன்றவைகளுக்கான கால அட்டவணை வெளியிடப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, கீழ்க்கண்ட மேலும் சில விவரங்கள், இணைவு பெற்ற அனைத்து சுய நிதி கல்வியியல் கல்லூரிகளின் முதல்வர்களின் கவனத்திற்கு கொண்டுவரப்படுகிறது.

1. சேர்க்கை செய்யப்பட்ட மாணவர்களது தகுதிக்கட்டணத்தை (eligibility fee), ஒரே வங்கி வரைவோலையாக வரும் 13/14.08.2018 அன்று நேரிடையாக இப்பல்கலைக்கழகத்தில் சமர்ப்பிக்கும்போது, அந்த வங்கி வரைவோலையின் பின்பக்கத்தில் "கல்லூரியின் கோடு, கல்லூரியின் பெயர், சேர்க்கை செய்த மொத்த மாணவர்களின் எண்ணிக்கை" போன்ற விவரங்கள் கட்டாயம் இடம்பெறவேண்டும்.

2. மாணவர்கள் பூர்த்தி செய்த விண்ணப்பத்தோடு, அக்கல்லூரியின் முதல்வரது சான்றொப்பத்துடன் கூடிய அனைத்து கல்வி, மாற்று(Transfer), சாதிச் சான்றிதழ்களின் நகல்களோடு, அவர்களது ஆதார் அட்டையின் நகலையும் அந்தந்த விண்ணப்பத்தோடு இணைத்து பல்கலைக்கழகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

3. அசல் சான்று சரிபார்ப்புப் பணிகள் பல்கலைக்கழகத்தில் 13.08.2018 மற்றும் 14.08.2018 ஆகிய நாட்களில் காலை 09.00 மணிக்கு துவங்கும்.

எனவே, பார்வையில் கண்ட கடிதத்தில் தெரிவித்துள்ள குறிப்புரைகளோடு, மேலே கண்ட குறிப்புரைகளையும் அவசியம் பின்பற்றி நடைமுறைப்படுத்த வேண்டும் என அனைத்து சுய நிதி கல்வியியல் கல்லூரிகளின் முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**பதிவாளர் (பொ)**